(ஆ) சங்கத்திலுள்ள அலுவலர்கள் பயமின்றி அமைதியான முறையில் செயல்பட காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் தேவையான பாதுகாப்புத் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு ஊழியர்களுக்கும், அந்த துறையைச் சேர்ந்த இயக்குநர்களுக்கும் நல்ல உறவு முறையை ஏற்படுத்த அரசு ஏதேனும் திட்டங்கள் வகுத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானாமதுரை கூட்டுறவு பால் வழங்கு சங்கப் பிரச்சினை மீது, இந்த சம்பவத்தை ஒட்டி சிப்பந்திகள் 3 பேர்களும், சிப்பந்திகள் அல்லாதார் 11 பேர்களுமாக 14 பேர்கள் கைது செய்யப்பட்டு காவல் துறையினர் விசாரித்து, மேல் நடவடிக்கையை துரிதமாக எடுத்து வருகிறார்கள். அங்கே சுமுகமான நிலவரம் உருவாகவும் அரசு முயன்று வருகிறது.

பழனியிலுள்ள டான்சி நிறுவனம்.

*வினா எண். 304—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனியில் உள்ள டான்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) அதனால் அரசுக்கு கிடைத்த லாபம் எவ்வளவு?

(இ) அங்கு எவ்வளவு பேர் பணிபுரிகின்றனர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு :—

1977-78—ரூ. 18.16 இலட்சம்.
1978-79—ரூ. 23.71 இலட்சம்.
1979-80—ரூ. 29.24 இல்ட்சம்.

(ஆ) இலாப/நட்டங்கள் :

1977-78—நட்டம் ரூ. 0.70 இலட்சம்.
1978-79—நட்டம் ரூ. 0.34 இலட்சம்.
1979-80—இலாபம் ரூ. 3.20 இலட்சம்.

(இ) பணியாளர்கள் எண்ணிக்கை—98.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 2]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பழனியிலே இயங்கக் கூடிய இந்த டான்சி நிறுவனத்தில் 91 பேர்கள் வேலை செய்வதாகவும், அதிலே கடைசியிலே லாபம் வந்திருப்பதாகவும், இடையிலே இரண்டொரு ஆண்டுகள் நஷ்டத்தில் இருந்ததாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அங்கே உற்பத்தி செய்யக் கூடிய பொருள்கள் மிக அதிகமான விலையில் விற்கப்படுவதோடு, அவைகளுக்கு கிராக்கி அதிகமாக இருக்கிறது. இப்படி இருக்கும்போது இடையிலே 2 ஆண்டுகளில் நஷ்டம் ஏற்பட காரணம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, பழனியிலே இயங்கக் கூடிய டான்சி நிறுவனத்தின் சார்பில் அரிக்கேன் விளக்குகள் தயாரிப்பதற்காக ஏற்கனவே அங்கு தொடங்கப்பட்டது. ஆனால் அரிக்கேன் விளக்குகளுக்கு கிராக்கிகள் குறைந்துவிட்ட காரணத்தினால் diversification of the product என்ற வகையில் எக்கு பீரோ போன்ற தளவாட சாமான்கள் உற்பத்தி செய்து, அதை நட்டத்தில் இருந்து லாபத்தில் கொண்டு வந்து இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இன்றைக்கு அது லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றது. பழனி நகரில் இந்த டான்சி ஒன்றைத் தவிர, அரசுத் துறையில் வேறு எந்தத் தொழிலும் கிடையாது. ஆகவே இதையாவது மேலும் விஸ்தரித்து, 100, 200 பேர்கள் மேற்கொண்டு வேலை செய்யக் கூடிய முறையில், அந்தப் பகுதியில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே, அதிகமாக உற்பத்தி செய்து விற்பனை செய்யும் போது நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அதிகமான உற்பத்தி செய்யும்போது நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? இது ராந்தல் விளக்குகள் தயார் செய்யும் தொழிற்சாலையாக துவங்கப்பட்டு, பின்னர் அலமாரி, பீரோ போன்ற பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையாக தமிழகம் முழுவதும் மாற்றப்பட்டிருக்கிறது.

இது ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் பொது மக்களுக்குத் தேவையான சைக்கிள்கள் போன்ற பொருள்களைத் தயாரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தும் இது போன்று மாற்றுவதற்கு அரசின் குறிக்கோள் என்ன என்பதையும், இது என்ன நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 2

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களை, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, துவக்கத்தில் சில பொருள்களைச் செய்யலாம் என்று ஆரம்பிக்கிறோம். பிறகு வாங்குவோரின் உணர்வுகள் மாறுகின்றன. ஆகவே, அங்கே இருக்கும் நிலைமைகளை அனுசரித்து, அந்த நிறுவனம் நஷ்டத்தில் விழாமல் இருக்கவும், வாடிக்கையாளர்களுக்குத் தரமான பொருள்களை நியாயமான விலையில் தருவதற்கும் அங்கே சில மாற்றங்களைச் செய்கிறோம். அந்த வகையில் தான் பழனியில் முதலில் அரிக்கேன் விளக்கு தயாரிக்கப்பட்டது. தற்போது அங்கே ''பேப்ரிகேஷன்'' செய்யப்படுகிறது. டான்சியைப் பொறுத்த வரையில் 56 நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த 56 நிறுவனங்களைப் பொறுத்த வரையிலும் அவ்வப்போது இப்படிப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, எங்கெங்கே இப்படிப்பட்ட மாற்றம் செய்ய வேண்டும் என்கிற அவசியம் ஏற்படுகிறதோ அங்கெங்கெல்லாம் உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக வனங்களில் 'சூபாபுல்' மரங்களை வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 305—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. செ.செம்மலை—மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள வனங்களில் அதிக அளவில் ''சூபாபுல்'' மரங்களை பயிரிடும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். இது குறித்து விவர அறிக்கை@ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''பார்ம் பாரஸ்ட்'' திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள எல்லா கிராமப் புறங்களிலும் உள்ள ஓடைகள், குளங்கள் ஆகிய இடங்களில் சாலி, கருவேலம், சாத்து மரம் போன்ற மரங்கள் வனத்துறை அதிகாரிகளால் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவை பலன் தருவதற்கு 20 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, கிராமங்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களில், ஆற்றுப் படுகைகளில், கால்நடைகளுக்குத் தீவனமாகவும்,

---

@427-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.